***

JUDICIAL FORM NO.53
{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC// 57/2021 |
| | : | Prosecution P.W - 1 |
| NAME | : | பிச்சம்மாள் |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Tuesday 22.07.2025.

**முதல் விசாரணை**

நான் தற்போது தென்காசியில் குடியிருந்து வருகிறேன். நான் இல்லத்தரசியாக உள்ளேன். எதிரிகளை எனக்கு தெரியும். என் பக்கத்து வீட்டுக்காரர்கள். சாட்சி ஜெயலெட்சுமி என் மகள். 2020ம் வருடம் 6வது மாதம் தேதி நினைவில் இல்லை. மாலை 7.00 முதல் 7.30 மணியளவில் என் கணவர் சேர்மக்கனி மகள் ஜெயலெட்சுமி மற்றும் நானும் என் வீட்டில் இருந்த போது எனது மகன் இசக்கி முத்து 1வது எதிரியின் அக்காவை காதலித்து திருமணம் செய்து கொண்டார். ரகுகுமாரின் அக்கா விஜி என் மகனுடன் வந்தது ரகுகுமாருக்கு பிடிக்கவில்லை. அதனால் அடிக்கடி மது அருந்தி விட்டு என் வீட்டு முன்பு வந்து அசிங்க அசிங்கமாக பேசுவார். சம்பவத்தன்று நான் இரவு வீட்டில் இருந்த போது 1வது எதிரி அங்கு வந்து என்னை பார்த்து அசிங்கமாக பேசினார் என் கணவருக்கு கண் தெரியாது என்றும் உன் கணவர் செய்வது போலவே உன்னையும் செய்வேன் என்று அசிங்கமாக பேசினார். என்னை கையாலும், காலாலும் அடித்து மிதித்து கடையின் முன்பு உள்ள ஓடையில்

தள்ளிவிட்டார். எனது ஆடைகளை அவித்தும் என் கழுத்தில் கிடந்த தாலியுடன் கூடிய 7 பவுண் செயினையும் அத்து கொண்டு சென்றுவிட்டார். என் செயின் இது வரை என் கைக்கு வரவில்லை. பின்னர் எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்க காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார்மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். புகார் மனு நான் கொடுத்தது தான். மேற்படி புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடுசெய்யப்படுகிறது.போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

என் மகன் இசக்கி முத்து என்பவர் 2ம் எதிரியின் மகளை காதலித்து திருமணம் செய்து கொண்டதால் இரு குடும்பத்துக்கும் முன்விரோதம் இருந்து வந்தது என்றால் சரிதான். எதிரிகளின் வீடு என் வீட்டிற்கு பின்புறம் உள்ளது. என் வீட்டிற்கு எதிரே என் மகன் இசக்கி முத்து வீடு உள்ளது என்றால் சரிதான். 1ம் எதிரி பாம்பேயில் இருக்கிறார் என்றால் சரிதான். அவ்வப்போது வருவார் என்றால் சரிதான். புகார் மனுவில் என் கணவர் செய்த மாதிரி உன்னை செய்வேன் என 1ம் எதிரி சொன்னதாக புகார் மனுவில் சொன்னேனா என்றால் சொல்லவில்லை. அசிங்கமான வார்த்தைகளால் பேசியதாக சொல்லி உள்ளேன். சம்பவம் நடந்தது 12.06.2020 என்றால் சரிதான். சம்பவம் நடந்த மறுநாள் தான் புகார் கொடுத்தேனா என்றால் சம்பவத்தன்று புகார் கொடுக்க சென்றேன் இரவு நேரம் என்பதால் மறுநாள் வர சொன்னார்கள். நான் சம்பவம் நடந்த மறுநாள் தான் புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. என்னையும், என் மகளையும் அடித்ததாக சொல்லி உள்ளதற்கு மருத்துவமனை சென்றோமா என்றால் சென்றோம். கொரோனா நேரம் என்பதால் மருந்து மாத்திரை கொடுத்து அனுப்பிவிட்டார்கள்.

பொதுவாக மருத்துவமனை சென்றால் போலிஸாருக்கு தகவல் கொடுப்பார்கள் என்றால் மருத்துவமனைக்கு சென்றோம். மருத்துவரை பார்க்கவில்லை, செவிலியர் மருந்து மாத்திரை கொடுத்தார்கள். 1ம் எதிரி வீட்டுக்குள் வந்து என்னை அடித்தாரா என்றால் கேட்டை திறந்து காம்பவுண்டுக்குள் அடித்து ரோட்டுக்கு இழுத்து கொண்டு வந்தார். நான் 1ம் எதிரியின் அம்மா வயதில் உள்ளதால் என்னை 1ம் எதிரி சேலை பிடித்து இழுக்கவில்லை என்றால் சரியல்ல. எனக்கு 69 வயதாகிறது. பேரன் வயதில் உள்ள ஒரு பையன் சேலையை பிடித்து இழுக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. காவல் நிலையத்தில் கொடுத்த புகார் மனுவை என் மகள் விஜயலெட்சுமி எழுதினாள். போலிஸ் எங்கள் மீதும் வழக்கு பதிவு செய்தார்கள் என்றால் சரிதான். அந்த வழக்கு STC 1896/2023 என்றால் சரிதான். அந்த வழக்கில் நானும், என் மகள்

ஜெயலெட்சுமியும் குற்றத்தை ஒப்புக் கொண்டு அபராதம் கட்டி உள்ளோம் என்றால் சரிதான். அதில் எனக்கு ரூ.2000 மும், என் மகள் ஜெயலெட்சுமிக்கு ரூ.1000 மும் அபராதம் விதிக்கப்பட்டது என்றால் சரிதான். எனக்கு விஜயலெட்சுமி என்ற மற்றொரு மகள் இருக்கிறாள் என்றால் சரிதான். அவர் ரயில்வேயில் வேலை பார்க்கிறார் என்றால் சரிதான். அவர் தான் என்னுடன் வந்து காவல்நிலையத்தில் புகார் எழுதி கொடுத்தார் என்றால் சரிதான்.

என் மகள் விஜயலெட்சுமி அவருடைய சகோதரர் இசக்கி முத்து மீது தற்போது வரை கோபத்தில் இருந்து வருகிறார் என்றால் எங்கள் வீட்டில் அனைவரும் கோவத்தில் தான் இருக்கிறோம். அதனால் அண்ணன் குடும்பத்தை பழி வாங்க வேண்டும் என்று இல்லாத சங்கதியை புகாரில் சொல்லி உள்ளார் என்றால் சரியல்ல. என் வீட்டு பக்கத்தில் ஜோதி மளிகை கடை உள்ளதா என்றால் உள்ளது. கருப்பசாமி வீடு, முருகன் வீடு, டெய்லர் கடை அருகில் உள்ளது என்றால் சரிதான். சம்பவ சமயத்தில் அவர்கள் எல்லோரும் கூடி விட்டார்கள் என்றால் சரிதான். அவர்கள் யாரும் இந்த வழக்கில் சாட்சியாக சேர்க்கப்படவில்லை என்றால் சரிதான். நான் சொன்ன நேரத்தில் சொன்ன தேதியில் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. ரகுகுமாரும் அவரது தாயாரும் என்னை அடிக்கவில்லை என்றாலும் ரகுகுமார் சேலையை பிடித்து இழுக்கவில்லை என்றாலும என் செயினை அக்கவில்லை என்றாலும் நான் பொய் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. போலிஸார் இவ்வழக்கை சரியாக விசாரிக்காமல் எதிரிகள் மீது பொய்யாக இந்த வழக்கை பதிவு செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. வழக்கிற்கும் எதிரிக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//- Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi